[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 27

'to discuss the need to ensure continuity of service to the youths selected for the Youth Service Corps for the past three years'

யூத் சர்விஸ் கோர் பற்றிச் சொல்லப்பட்டது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு வெளியே அனுப்பிவிடுவார்களோ என்ற நிலையிருக்கிறது. அவர்களை அனுப்பமாட்டோம் என்று அறிவிக்க வேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்களும் சொன்னார்கள்.

'to discuss the need to expedite construction of Commercial Tax Office and Hindu Religious and Charitable Endowments Deputy Commissioner's Office in Madurai'

மதுரையில் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ் இருக்கிறது. இப்பொழுது 2, 3 ஏக்கரா நிலம் வாங்கியிருக்கிறார்கள், அது எப்பொழுது சீக்கிரமாக முடியும் என்று நமக்கு அறிவிக்க வேண்டும்.

(6) அறிவிப்புகள்.

(அ) பேரவைக்குள் துண்டறிக்கைகளை பார்வையாளர் மாடத்திலிருந்து சிலர் வீசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. நடேசன் அவர்களுடைய மகன் பி. என். ராமச்சந்திரன், திரு. ஜி. மைக்கேல் அவர்களுடைய மகன் எம். வின்சென்ட், திரு. ஏ. கே. ராஜையா அவர்களுடைய மகன் கே. ஆர். ரத்தினராஜ், திரு. நாச்சிமுத்து அவர்களுடைய மகன் வி. என். சுப்ரமணியம், திரு. குமாரசாமி அவர்களுடைய மகன் டி. கே. கருப்பையா, சேவடி அனந்தர் அவர்களுடைய மகன் எஸ். புருஷோத்தமன், திரு. தனுஷ்கோடி அவர்களுடைய மகன் டி. கமலக்கண்ணன் ஆகிய மேலே கூறப்பட்ட நபர்கள் இன்று காலை 10.40 மணியளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களைப் பேரவைக்குள் வீசியெறிந்து கோஷங்கள் இட்டனர். இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றமாகும். இதனைப் பேரவையின் தீர்ப்புக்கு அவைமுன் வைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று பேரவை நடந்து கொண்டிருக்கும்பொழுது பார்வையாளர் பகுதியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசியவர்கள் மாணவர்கள் என்று தெரிகிறது. அதிலும் சட்டப் பயிற்சி பெறும் மாணவர்கள் என்று தெரிகிறது. சட்டப் பள்ளி பெறுகின்றவர்கள் இப்படிப்பட்ட சட்ட விரோதமான காரியத்திற்குத் தூண்டிவிடப்பட்டிருக்

கிறார்கள். அந்த மாணவர்களுக்குப் பார்வையாளர் உரிமைச் சீட்டு வழங்குகின்ற கையொப்பத்தை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், அண்ணா தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் தந்திருக்கிறார். காலையிலிருந்து அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த சில தலைவர்கள் அந்த மாணவர்களை இந்தக் காரியம் செய்ய வேண்டுமென்பதற்காக இந்தப் பகுதியிலே அலைந்து திரிந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள் என்றும் தெரிகிறது. என்றாலும் இந்தக் காரியத்தைச் செய்தவர்கள் மாணவர்கள். அவர்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செய்திருக்கிறார்கள். மாணவர்கள் முதலிலே இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருப்பதால், மாணவர்கள் ஈடுபட்ட முதல் தவறு என்ற வகையில் இந்தப் பேரவையும், தாங்களும் பெருந்தன்மை காட்டி அவர்களை மன்னித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் கொண்டு வரட்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒழுங்குப்பிரச்னை சார். மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிறகு தீர்மானம் செய்யலாம் என்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் இப்பொழுது நடவடிக்கை தேவையில்லை என்று சொல்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது. இருந்தாலும் அண்ணா தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள் குறிப்பாகப் பார்வையாளர் சீட்டு கொடுக்கும் நேரத்தில் (குறுக்கீடு) அவர்கள் சொன்ன காரணத்தால் சொல்கிறேன், இரண்டு நிமிஷங்கள் கொடுங்கள், நான் விளக்கிய பிறகு நீங்கள் முடிவு பண்ணுங்கள். ஏற்கனவே ஒருமுறை இந்த மன்றத்திலே "ரிபப்ளிகன் பார்ட்டி" சம்பந்தமாக ஒரு காகிதத்தைப் போட்ட நேரத்திலே அந்தப் பார்வைச் சீட்டை தி.மு.க. எம்.எல்.ஏ. கொடுத்திருக்கிறார். பார்வையாளர்கள் சீட்டு கேட்கிறார்கள், பல பேர்கள் கேட்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் சோதனை செய்து கொடுப்பது என்றால் இயலாத காரியம். அவர்கள் வந்து கேட்கும் நேரத்தில் தெரிந்தவர்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும் காரணத்தால் தூண்டியிருக்கிறோம் என்றால். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு திருத்தம். நான் இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் தூண்டி விட்டார்கள் என்று சொல்லவில்லை. இந்த அவையிலே உள்ள உறுப்பினர்தான் கொடுத்திருக்கிறார் என்றுதான் சொல்லியிருக்கிறேன், தூண்டிவிட்டார் என்று சொல்லவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த சீட்டைக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் பலதடவைகள் கொடுத்து வருகிறோம். யார் யாருக்கு என்று தெரியாது. இதைப்பொறுத்தவரையில் இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்டுதல் அல்ல, மாணவர்கள் அத்தனைபேரும் சேர்ந்து நடைபெற்றுக்கொண்டு வரும் இயக்கமே தவிர இதில் தனிப்பட்ட கட்சி கிடையாது. நேற்றுகூட அனைத்துக் கட்சி மாணவர்களும் நடத்தியிருக்கிறார்கள். எனவே, இந்த விஷயத்தில் மாணவர்களைப் பழி வாங்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நாளைக்குத் தீர்மானமாகக் கொண்டு வரலாம். எந்தவிதமான நடவடிக்கையையும் மாணவர்கள்மீது எடுக்க வேண்டாமென்று நான் முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆர்டர் இல்லை.

(7) அரசினர் தீர்மானம்.

பேரவைக்குள் துண்டறிக்கைகளை பார்வையாளர் மாடத்திலிருந்து வீசியெறிந்த மாணவர்களை மன்னித்து விடுவது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

" திரு. நடேசன் அவர்களுடைய மகன் பி. என். ராமச்சந்திரன், திரு. ஜி. மைக்கேல் அவர்களுடைய மகன் எம். வின்செண்ட், திரு. ஏ. கே. ராஜையா அவர்களுடைய மகன் கே. ஆர். ரத்னராஜ், திரு. நாச்சிமுத்து அவர்களுடைய மகன் வி. என். சுப்ரமணியம், திரு. குமாரசாமி அவர்களுடைய மகன் டி. கே. கருப்பையா, திரு. சேவடி அனந்தர் அவர்களுடைய மகன் எஸ். புருஷோத்துமன், திரு. தனுஷ்கோடி அவர்களுடைய மகன் டி. கமலக்கண்ணன்